[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் மசோதா

1968-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி—மாவட்ட நகராட்சிகள்—ஊராட்சிகள் (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: 1968-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி—மாவட்ட நகராட்சிகள்—ஊராட்சிகள் (திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: 1968-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி—மாவட்ட நகராட்சிகள்—ஊராட்சிகள் (திருத்த) மசோதாவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

3. 1968-69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி

கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பினகீழ் ரூ. 1,58,80,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

திரு. வி. கே. கோதண்டராமன்: விவசாயத்திற்குத் தேவையான பொருள்களின்மீதும் உணவுப் பொருள்களின்மீதும் விற்பனை வரி போடாமல் விதிவிலக்கு அளிக்க வேண்டிய அவசியத்தை எடுத்துக்கூற—

"கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பினகீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,58,80,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: விற்பனை வரி வசூலிப்பதில் சிறு வியாபாரிகளுக்கு ஏற்படும் கஷ்டங்களைப்பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,58,80,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: ஐயா, ஏழைகள் உபயோகிக்கும் எல்லா உணவுப் பொருள்களையும், விற்பனை வரி விதிப்பிலிருந்து நீக்குவதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,58,80,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.